# SRI LANKA COLLEGE OF PSYCHIATRISTS

"WIJERAMA HOUSE", 6, WIJERAMA MAWATHA, COLOMBO 7, SRI LANKA.
Tel: +94 11 2056493; E-mail: contactslcpsych@gmail.com
Web: www.slcpsych.lk


11/05/2022


**Council 2020/22**

**President**
Dr.Gihan Abeywardena

**President Elect**
Dr.Kapila Ranasinghe

**Past President (ex-officio)**
Prof. Shehan Williams

**Vice President**
Dr. Ranjani Seveviratne

**Secretary**
Dr. Chamara Wijesinghe

**Assistant Secretary**
Dr. Sumudu Godawita

**Treasurer**
Dr.Senaka Jayasundara

**Assistant Treasurer**
Dr. Aruni Abeysinghe

**Editors**
Prof.Thilini Rajapakse
Dr.Aruni Hapangama

**Committee Members**
Dr.Jayan Mendis
Dr.Dulshika Waas
Dr Prabath Wickrama
Dr.Dewasmika Ariyasinghe
Dr.Anuprabha Wickramasinghe

**Public Relations Officer**
Dr. Sajeewana Amarasinghe


## இலங்கை உளமருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் ஊடக அறிக்கை

## வன்முறையும் அதன் நிரந்தரமான சீர்ப்படுத்த முடியாத விளைவுகளும்

கடந்த சில நாட்களாக நாட்டில் தொடர்ந்து நிகழும் வன்முறைச் சம்பவங்கள் இலங்கை உளமருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் உறுப்பினர்களை மிகவும் கவலை அடையச் செய்கின்றன. தனிநபர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் மீது ஏற்படக்கூடிய கற்பனை செய்ய முடியாத உடல், உளரீதியிலான விளைவுகளைக் கருத்திற் கொண்டு அனைத்து வடிவத்திலான வன்முறைகளும் முற்றாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

உடல்ரீதியாகத் தாக்கத்துக்குள்ளாவது, வன்முறை நிகழ்வொன்றுக்கு அருகில் இருப்பது அல்லது அதனைக் காண்பது போன்றவை தீவிர நெருக்கீட்டுக் கோளாறு, நெருக்கீட்டுக்குப் பின்னரான மனவடு நோய், பதற்றக் கோளாறு, கடுமையான மனச்சோர்வு போன்ற பல விதமான உளவியல் நோய்நிலைகளுக்கு வழிவகுக்கும். வன்முறையின் காரணமாக ஏற்படும் உடல்ரீதியான பாதிப்புகள் காலப் போக்கில் குறைவடைந்தாலும், உளவியல் விளைவுகள் வாழ்நாள் முழுவதும் நீடிக்க வல்லன.

தனியார் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட பரவலான சேதம் மற்றும் இயல்பான நடவடிக்கைகள், வேலைகளை மீண்டும் தொடங்குவது தொடர்பான பொருளாதாரத் தாக்கம் காரணமாக உளவியல் ரீதியான விளைவுகள் ஏற்படலாம். அழிவுகள் மற்றும் அதற்கு வழிவகுத்த காரணிகள் முற்றுப் பெறாத வரை, ஏற்கனவே கஷ்டமான பொருளாதார சூழ்நிலையில் வாழ்கின்ற, தங்கள் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத குடும்பங்களில், மனச்சோர்வு மற்றும் பதற்றம் என்பன கணிசமான அளவில் அதிகரிக்கும்.

வன்முறை காரணமாக எமது நாட்டின் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஏற்படும் தீங்கு விளைவிக்கும் உளவியல் பாதிப்புகளும் முக்கியப்படுத்தப்பட வேண்டியன. வன்முறைச் செயல்களை நேரடியாக அல்லது தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாகப் பார்க்கும் சிறுவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகலாம். இளம் வயதில் வன்முறைகளை எதிர்கொள்வது, குறிப்பாக அந்த வன்முறைகள் சிறுவர்கள் தங்கள் முன்மாதிரியாகக் கருதும் நபர்களால் மேற்கொள்ளப்பட்டால் அது அவர்கள் வளர்ந்தவர்களாகும் போது அந்த சிறுவர்கள் வன்முறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அதிகரிக்க வல்லது.மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் மற்றும் கொவிட் 19 பெருந்தொற்று தொற்றுநிலைமை காரணமாக 2019 முதல் எமது நாட்டின் சிறுவர்களின் கல்வி சீர்குலைக்கப்பட்டுள்ளது.

# SRI LANKA COLLEGE OF PSYCHIATRISTS

"WIJERAMA HOUSE", 6, WIJERAMA MAWATHA, COLOMBO 7, SRI LANKA.

Tel: +94 11 2056493; E-mail: contactslcpsych@gmail.com
Web: www.slcpsych.lk



**Council 2020/22**

**President**
Dr.Gihan Abeywardena

**President Elect**
Dr.Kapila Ranasinghe

**Past President (ex-officio)**
Prof. Shehan Williams

**Vice President**
Dr. Ranjani Seveviratne

**Secretary**
Dr. Chamara Wijesinghe

**Assistant Secretary**
Dr. Sumudu Godawita

**Treasurer**
Dr.Senaka Jayasundara

**Assistant Treasurer**
Dr. Aruni Abeysinghe

**Editors**
Prof.Thilini Rajapakse
Dr.Aruni Hapangama

**Committee Members**
Dr.Jayan Mendis
Dr.Dulshika Waas
Dr Prabath Wickrama
Dr.Dewasmika Ariyasinghe
Dr.Anuprabha Wickramasinghe

**Public Relations Officer**
Dr. Sajeewana Amarasinghe


தற்போதைய வன்முறைச் செயல்கள் காரணமாக பாடசாலைகள் மூடப்படும் நிலைமை சிறுவர்களின் கல்வியில் மாத்திரமல்லாது, ஆரோக்கியமான சமூக உறவுகளை உருவாக்கும் அவர்களின் திறன் விருத்தியிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவல்லது.

அமைதியான போராட்டங்கள் எந்தவொரு குடிமகனின் ஜனநாயக உரிமையாகும், என்பதுடன் எமது நாட்டின் இளைஞர்கள் கடந்த ஒரு மாதமாக இந்த உரிமையைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆக்கிரமிப்பு வழிமுறைகள் மற்றும் உபாயங்கள் மூலம் அவர்களின் உரிமைகளைத் தடுப்பது ஏற்கனவே தங்கள் துரதிர்ஷ்டமான நிலை குறித்து உதவியற்றிருப்பதாக உணரும் இளைஞர்களிடையே விரக்தியை மேலும் அதிகரிக்கும். இது பேராபத்து மிக்க விளைவுகளுக்கு வழிவகுக்கும். அமைதியான முறையில் போராட்டம் தொடர்வதற்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரத்திலுள்ளவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம். அதே வேளை எங்கள் சக குடிமக்கள் தங்கள் போராட்டங்களை அமைதியாக, வன்முறையற்ற வழிமுறைகள் மூலம் மட்டுமே நடத்துமாறு எமது சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இலங்கை உளமருத்துவ நிபுணர்கள் சங்கமானது, அனைத்து இலங்கையர்களின் உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது. தேசத்திற்கும் மக்களுக்கும் தேவைப்படும் நேரத்தில், நாங்கள் அச்சமோ எந்த வித பாரபட்சமோ இல்லாமல் தொடர்ந்தும் எங்கள் ஆதரவினை அளிப்போம்.

தொடர்ச்சியான வன்முறையால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட எவரும் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை 0712578578 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம், மேலும் அவர்கள் தேசிய உளநல நிறுவகத்தின் 24 மணி நேர அவசரத் தொலைபேசி இலக்கமான 1926 இனைத் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் மற்றும் உளநல ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

Dr.Gihan Abeywardena
President

Dr.Chamara Wijesinghe
Secretary